# அனைத்துப் பிரசைகளுக்கும் மதம் அல்லது நம்பிக்கையை உடையவராயிருப்பதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?

## ஆம்.

உறுப்புரை 10 - ஒரு மதத்தைக் உடையவராயிருப்பதற்கான அல்லது உங்களது மதத்தை மாற்றுவதற்கான உரிமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள்.

உறுப்புரை 14(1)(உ) - தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கு நீங்கள் உரித்துடையவராயிருக்கின்றீர்கள்.

### எனது மத சுதந்திரத்திற்கான உரிமை கட்டுப்படுத்தப்பட முடியுமா?

உறுப்புரை 10 முழுமையான உரிமையொன்றாகும் என்பதுடன் கட்டுப்படுத்தப்பட முடியாதது. ஆயினும், உறுப்புரை 14(1)(உ) இனது ஏற்பாடுகளின் பிரகாரம் ஒருவரது மதத்தை வெளிப்படுத்தும் உரிமை தேசியப் பாதுகாப்பு, இன மற்றும் மத சுமுக வாழ்வு அல்லது பொதுமக்கள் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் ஆகியவற்றின் நலன்கருதி, உறுப்புரை 15(7) இனுடாக வரையறுக்கப்படலாம். பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றினால் மாத்திரமே இவ்வுரிமை கட்டுப்படுத்தப்படலாம்.

### மத வழிபாட்டிடமொன்றினைப் பதிவு செய்வதற்கு சட்டத் தேவைப்பாடொன்று காணப்படுகின்றதா?

மத வழிபாட்டிடமொன்றினைப் பதிவு செய்வதற்கு சட்டத் தேவைப்பாடு எதுவுமில்லை. ஆயினும், 2008 ஆம் ஆண்டில் புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையொன்று அனைத்துப் “புதிய மத வழிபாட்டிடக் கட்டுமானங்களும்” அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபையிடமிருந்து முன்கூட்டிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றது. ஆயினும், சுற்றறிக்கைகள் சட்டங்களல்ல. சில மதங்கள் தமது மத வழிபாட்டிடங்களை சுயாதீன பிரதிநிதித்துவ அமைப்புக்களில் பதிவு செய்யலாம் (முஸ்லிம் பள்ளிவாசல்). ஆயினும், இது அரசாங்கத் தேவைப்பாடு ஒன்றல்ல.

### அரசாங்க அதிகாரிகள் மத வழிபாட்டிடமொன்றின் சட்டத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும்போது அல்லது பதிவு செய்யும்படி கோரும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகள் யாவை?

- ☐ அவர்களது விசாரணையின் சட்ட அடிப்படை குறித்து அதிகாரிகளிடம் கேட்டல்.
- ☐ அவர்கள் சுற்றறிக்கை 2008 இனை மேற்கோள் காட்டினால், குறிப்பிட்ட சுற்றறிக்கையின் சட்ட அடிப்படை குறித்து அவர்களிடம் கேட்டல்.
- ☐ சுற்றறிக்கை 2008 புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டதென்பதையும் தற்போது கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் தமது சொந்த விடயப்பரப்பிற்குப் பொறுப்புடைய அமைச்சுக்களினால் ஆட்சி செய்யப்படுகின்றனர் என்பதையும் குறிப்பிடுங்கள்.
- ☐ முஸ்லிம் பள்ளிவாசல்கள் தொடர்பில், பள்ளிவாசல் வக்குப் சபையினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றதென அரசாங்க அதிகாரிக்குத் தெரிவியுங்கள்.
- ☐ இவ்விடயம் தொடர்பில் NCEASL அல்லது வேறேதேனும் வாதிடும் குழுவிற்குத் தெரியப்படுத்துங்கள்.
- ☐ நீங்கள் எந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்ய வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள் என்பதைக் கேட்கும் கோரிக்கைப் பத்திரமொன்றை சட்டத்தரணி ஒருவரினூடாக அனுப்புங்கள்.

### அனுமதிப்பத்திர அடிப்படையில் வழங்கப்பட்ட அரச காணியில் நான் மத வழிபாட்டிடமொன்றைக் கட்டலாமா?

இல்லை. அனுமதிப்பத்திர அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகள் அரசாங்கத்திற்குரியவை என்பதுடன் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். விவசாய நோக்கங்களுக்காக பொது மக்களுக்கு அனுமதிப்பத்திர அடிப்படையில் காணிகள் வழங்கப்படுகின்றன. அனுமதிப்பத்திர அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளில் மத நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் செயற்பட முடியாது.

### இவ்வகை காணியில் கட்டப்பட்ட மத வழிபாட்டிடமொன்றை தகர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் நான் என்ன செய்ய முடியும்?

அக்கட்டடம் அல்லது கட்டமைப்பைத் தகர்ப்பதை நிறுத்துவதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைக்குக் கட்டளையிடும் ஆவணமொன்றை நீதிபதியொருவரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் (ஆணை விண்ணப்பம்).

### மத வழிபாட்டிடமொன்றைத் தாக்குவோருக்கெதிரான சட்ட நடவடிக்கையை ஆதரிக்கும் சட்டங்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா?

ஆம். இவ்வாறான சம்பவங்கள் தண்டனை சட்டக்கோவையின் கீழ் குற்றவியல் சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்படுகின்றன (பிரிவு 290 மற்றும் பிரிவு 291).

### மத வழிபாட்டிடமொன்று தாக்கப்படுமாயின் மேற்கொள்ளப்படக்கூடிய சில நடவடிக்கைகள் எவை?

- ☐ உடனடியாகப் பொலிஸ் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்து அனைத்து நிதிசார் சேதங்களும் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல்.
- ☐ கையொப்பமிடுவதற்கு முன்னதாக முறைப்பாட்டை முழுமையாக வாசித்தல். இலங்கையின் அரச கரும மொழிகளான சிங்களம் அல்லது தமிழில் பொலிஸ் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்படலாம்.
- ☐ மதப் பிணக்குகள் பற்றிய விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவிற்குத் தெரியப்படுத்தல்.
- IGP இனுடைய நிவாரண சேவைக்குத் தெரியப்படுத்தல்.
- ☐ தாக்குதலில் ஈடுபட்ட எந்தவோர் அரசாங்க அதிகாரியின் மீதும் அடிப்படை உரிமைகள் வழக்கொன்று பதிவுசெய்யப்படலாம்.

### முறைப்பாடொன்றை ஏற்றுக்கொள்வதற்குப் பொலிஸ் மறுப்புத் தெரிவிப்பின் என்ன செய்ய முடியும்?

- ☐ பதிவுத் தபால் மூலமாக பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடொன்றை அனுப்புவதுடன் பதிவுத் தபாலின் குறிப்பு அட்டையை உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள்.
- ☐ பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குப் பிரதியிட்டு, பொலிஸ் மாஅதிபருக்கு எழுத்துமூலம் அறிவியுங்கள்.
- ☐ பொலிஸாரின் எந்தவொரு செயலின்மை குறித்தும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்துங்கள்.
- ☐ சம்பவம் இடம்பெற்று 30 நாட்களுக்குள் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்யுங்கள்.
- ☐ செயலின்மை தொடருமாயின், பொலிசுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடருங்கள் (சம்பவம் இடம்பெற்று 1 மாத காலப்பகுதிக்குள்).
- ☐ சட்டத்தரணியொருவரிடமிருந்து உடனடியாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

### ஒலி மாசடைதல் சம்பந்தமாக சட்டங்கள் காணப்படுகின்றனவா?

ஆம். (1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் 98-106 ஆகிய பிரிவுகளின் கீழ். ஒலிபெருக்கிகளின் பயன்பாட்டிற்காக அப்பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்திலிருந்து ஒலி தொடர்பிலான அனுமதிப்பத்திரமொன்று (sound permit) பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அனைத்துத் தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் ஒலி தொடர்பிலான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவிப்பின், பொலிசுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நடவடிக்கை தொடரப்படலாம்.

### மதக் காரணங்களுக்காக பொது மயானத்தில் அடக்கத்திற்கான அனுமதி மறுக்கப்படலாமா?

ஒவ்வொரு நபருக்கும் அவரின் மரித்தோரை பொது மயானத்தில் அடக்கம் செய்வதற்கான உரிமை உண்டு. எந்தவொரு மதத்தினது சம்பிரதாயங்களுக்கமைவாகவும் அடக்கம் செய்ய முடியுமென 1899 ஆம் ஆண்டின் பொது மயானம் மற்றும் அடக்க கட்டளைச்சட்டத்தின் 13 ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது.

### பொது மயானத்தில் அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டால் நான் செய்யவேண்டியது என்ன?

- ☐ சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்வதுடன் தகனம் செய்வதை அனுமதிப்பதற்கான கட்டளையொன்றை நீதவான் (Magistrate's) நீதிமன்றத்திடம் கோருதல் (1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் 136 அ பிரிவு).
- ☐ சம்பந்தப்பட்ட விடயம் குறித்து பிரதேச செயலரிடம் மனுவொன்றைச் சமரப்பிப்பதுடன் வழங்கப்பட்டதொரு கால எல்லைக்குள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலரிடம் கோருதல். அக்காலப்பகுதிக்குள் அவர்/அவள் நடவடிக்கை மேற்கொள்ளத் தவறின், அவரது/அவளது கடமையை மேற்கொள்ளத் தவறியமைக்காக பிரதேச செயலருக்கெதிராக வழக்கொன்று தொடரப்படலாம்.

### வெறுக்கத்தக்க உரைக்கெதிரான சட்டங்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா?

இன அல்லது மத விரோதத்தை ஊக்குவித்தல் குற்றமொன்றென 2007 ஆம் ஆண்டின் ICCPR சட்டத்தின் 3 ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது.

Brochure 4-fold- Tamil.indd 1-4 6/17/2016 3:29:57 PM

### நான் வெறுக்கத்தக்க உரைக்கு ஆளாக நேரிடின் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

- ☐ பொலிஸ் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (NHRC) ஆகியவற்றில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தல்.
- ☐ பொலிஸ் செயலின்மை காணப்படும் பட்சத்தில், பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தல்.
- ☐ மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்தல்.

### எனது மத நம்பிக்கைகளின் அடிப்படையில் எனது பிள்ளையின் பாடசாலை அனுமதி மறுக்கப்பட முடியுமா?

மதம், தேசிய இனம், இனம், சாதி, சமுக அந்தஸ்து அல்லது மொழி என்பனவற்றின் அடிப்படையில் அரசாங்கப் பாடசாலைகளுக்கான அனுமதி மறுக்கப்பட முடியாதென 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் குறிப்பிடுகின்றது. பிள்ளையொருவரின் பாடசாலை அனுமதி மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளக்ககூடிய தீர்வுகளுக்காக கீழே பார்க்கவும். (அடிப்படை உரிமைகள் மீறல்).

### எனது பிள்ளையின் சமய நம்பிக்கைக்குப் புறம்பான சமயச் சடங்குகளைப் பின்பற்றுமாறு பிள்ளை வற்புறுத்தப்படலாமா?

இல்லை. பிள்ளையொருவர் வற்புறுத்தப்பட முடியாது. அவரது/அவளது நம்பிக்கைக்குப் புறம்பான மத சடங்குகள் அல்லது வழக்கங்களைப் பின்பற்றாமையினால் பிள்ளையொருவர் அபராதம் விதிக்கப்படுதல், தண்டனை அல்லது பாரபட்சம் ஆகியவற்றிற்கு உட்படலாகாது. இவ்வாறான வழக்கங்கள் இடம்பெறுமாயின் வலய மற்றும் பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு (NHRC) முறைப்பாடொன்று மேற்கொள்ளப்படலாம்.

### எனது அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

உடனடியாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு (NHRC) முறைப்பாடொன்றை மேற்கொள்வது. இங்கு முறைப்பாடொன்றை மேற்கொள்வதற்கு உங்களுக்கு சட்டத்தரணியொருவர் தேவையில்லை. ஒரு மாத காலப்பகுதிக்குள் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்படாவிடின், குறைந்தது 3 மாத காலப்பகுதிக்குள்ளேனும் மேற்கொள்வதற்கு நீங்கள் முயற்சிக்கவேண்டும். உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடருவது. மீறல் இடம்பெற்று 30 நாட்களுக்குள் வழக்குத் தொடரப்பட வேண்டும். குறிப்பு: அரசாங்கம்/அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக மாத்திரமே அடிப்படை உரிமைகள் வழக்குகள் தொடரப்படலாம்.

## மத சுதந்திரங்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் தொடர்பு கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள்

### தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (NHRC)

பாதிக்கப்பட்டவரால் அல்லது பாதிக்கப்பட்டவர் சார்பாக வேறொருவரால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படலாம். சட்டப் பிரதிநிதித்துவம் தேவையில்லை.

**முகவரி:** 165, கின்ஸி வீதி, கொழும்பு 8
**தொலைபேசி:** 011-2694925, 2685980, 2685981, 2685339
**அவசர தொலைத்தொடர்பு:** 011-2689064
**மின்னஞ்சல்:** sechrc@sltnet.lk
**இணையத்தளம்:** www.hrcsl.lk
**கிளைகள்:** யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பதுளை, கண்டி, மாத்தறை, நுவரேலியா, அம்பாறை.

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு

பொலிஸ் அதிகாரிகள் அல்லது பொலிஸ் சேவைக்கெதிரான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் நிவாரணம் வழங்குவதற்குமான அதிகாரத்தை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது.

**முகவரி:** தொகுதி இல. 9, BMICH, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7
**தொலைபேசி:** 011-5107721, 5107722
**தொலைநகல்:** 011-2683307
**மின்னஞ்சல்:** info@npc.gov.lk
**இணையத்தளம்:** www.npc.gov.lk

### கல்வி அமைச்சு

பாடசாலை தொடர்பான பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளை "பணிப்பாளர் நாயகம்" அல்லது "அமைச்சர்" என முகவரியிடப்பட்டு இவ் அமைச்சில் சமர்ப்பிக்கலாம்.

**முகவரி:** "இசுறுபாய", பெலவத்தை, பத்தரமுல்லை
**தொலைபேசி:** 011-2784810, 2785141-50
**தொலைநகல்:** 011-2785162
**மின்னஞ்சல்:** info@moe.gov.lk
**இணையத்தளம்:** www.moe.gov.lk

### சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு

**முகவரி:** 6 ஆம் தளம், "ரக்ஷன மந்திரய", 21, வொக்சோல் வீதி, கொழும்பு 2
**தொலைபேசி:** 011-2321222
**தொலைநகல்:** 011-2436672
**மின்னஞ்சல்:** johnaeamaratunga@gmail.com

### புத்த சாசன அமைச்சு

**முகவரி:** 135, சிறிமத் அநகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 3
**தொலைபேசி:** 011-2303285, 5979999
**தொலைநகல்:** 011-2303275
**இணையத்தளம்:** mbra.gov.lk

### முஸ்லிம் மத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

**முகவரி:** 180, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10
**தொலைபேசி:** 011-2691864, 2675367
**தொலைநகல்:** 011-2303275

### இந்து மத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

**முகவரி:** 248-1/1, காலி வீதி, கொழும்பு 4
**தொலைபேசி:** 011-2552641
**தொலைநகல்:** 011-2552825
**மின்னஞ்சல்:** hindudir@yahoo.com
**இணையத்தளம்:** www.hindudept.gov.lk

### இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (NCEASL)

சுவிசேஷக கிறிஸ்தவர்களின் பிரதிநிதித்துவ அமைப்பாகிய NCEASL இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் மதசுதந்திரத்தை பாதுகாத்தலில் ஈடுபடுகின்றது.

**முகவரி:** P.O. Box 113, தெகிவளை, இலங்கை
**தொலைபேசி:** 011-5511358
**மின்னஞ்சல்:** legal@nceasl.org
**இணையத்தளம்:** www.nceasl.org

# உங்களுக்கு தெரியுமா?

## மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரம் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

NCEASL

Brochure 4-fold- Tamil.indd 5-8
6/17/2016 3:29:57 PM